[2003 ஏப்ரல் 23

3. உரிமை மீறல் பிரச்சினை

(அ) 'இந்து' நாளிதழ்மீது

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என் கவனத்திற்கு வந்த இரண்டு பிரச்சினைகள் குறித்து, என் தீர்ப்பை இப்போது வழங்க விரும்புகிறேன்.

இந்த மாமன்றத்தைப் பொறுத்தமட்டில், பத்திரிகைத் துறை மற்றும் பத்திரிகையாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய உரிமைகள், முழுமையான அளவுக்குப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதை இந்த மாமன்றம் அறியும்; இந்த நாடு அறியும்.

12-4-2003 நாளிட்ட 'இந்து' பத்திரிகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பற்றி உண்மைக்கு மாறாக, உள்நோக்கம் கொண்டு, அவர்களது புகழுக்கு மாசு கற்பிக்கும் வகையில்,

"Walk-out to protest CM Offensive"

என்ற தலைப்பின்கீழ், கீழ்க்கண்ட வார்த்தைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன:

"...the Chief Minister Jayalalithaa's stinging abuse..."

"...Unrestrained attacks on the Opposition..."

"...Ms. Jayalalithaa fumed..."

"...Incensed Ms. Jayalalithaa alleged in a highpitched tone..."

13-4-2003 நாளிட்ட 'இந்து' பத்திரிகையில், திரு. ஜெயந்த் என்பவர் எழுதிய கட்டுரையில், கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"...The chastisement they received at the hands of the Chief Minister.."

"...43 other Legislators who raised this issue, were not only evicted, but also removed to the North Beach Police Station here a couple of days ago..."

"...Most of the Congress Legislators are shocked at the epithets the Chief Minister threw at the Opposition for its 'behaviour'..."

"...The conduct of Legislature...."

2003 ஏப்ரல் 23] [பேரவைத் தலைவர்]

23-4-2003 நாளிட்ட 'இந்து' பத்திரிகையில்,

"Jayalalithaa taunts Marxists again"

என்ற தலைப்பின்கீழ், கீழ்க்கண்டவாறு உண்மைக்கு மாறாக திரித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது;

"...Stung by the Chief Minister's diatribe, the Marxist members..."

"...She said education alone would not make a man sane, as leaders like Dr. Ramadoss and Dr. Krishnasamy, were notorious for casteist fanaticism.."

அரசின் செல்வாக்கையும், புகழையும், எந்த அளவிலாவது குறைக்க வேண்டுமென்ற வகையில், ஒரு உள்நோக்கத்தோடு தரங்கெட்ட வார்த்தைகளால், அவை உரிமைகளைப் பாதிக்கின்றவகையில் வெளியிடுவது, அவை உரிமையைப் பாதிப்பதாக உள்ளது. எனவே, இந்த ஆதாரமற்ற, நியாயமற்ற குற்றச்சாட்டுகளை விமர்சனம் செய்திருப்பது, அவை நடவடிக்கைகளைத் துச்சமாக மதித்து, பேரவையின் இறையாண்மையைப் பாதிப்பதால், இதனைப் பேரவை விதி 226-ன்கீழ் ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக, அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புகிறேன்.

(ஆ) உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றைய தினம், திரு. எஸ். ஆர். பி. அவர்கள் பேசிய வார்த்தைகளைத் தொடர்ந்து விவாதம் ஏற்பட்ட சூழ்நிலையில், நான் நீக்கியதை, அவைக் குறிப்பிலே மீண்டும் ஏற்றுகிறேன்.

ஜனநாயக அமைப்பில், சட்டமன்றத்திற்குள்ள மிக உயர்ந்த ஆளுகையையும், மாட்சிமையையும், இறையாண்மையும் காப்பாற்றுகின்ற பொறுப்பு எனக்கு உள்ளது. எனது நடவடிக்கைக்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையில், ஆதாரமற்ற, நியாயமற்ற குற்றச்சாட்டுகளை, நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள், இங்கு ஒலி வாங்கியை இயக்குவதற்குக் காவல் துறையைச் சேர்ந்த உளவுத் துறையினர் இங்கு இருப்பதாக அபாண்டமான குற்றச்சாட்டைச் சுமத்தினார்.

பேரவையின் மரபுகளைப் பேணாமல், உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்தி, பேரவையின் உரிமைகளை மறுக்கின்ற வகையிலும், பேரவையின் கௌரவத்தைக்